**செய்தி வெளியீடு எண்: 26/2024** **நாள்: 08.02.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2-ல் ஓட்டுனர் இல்லா மெட்ரோ இரயில்களின் உற்பத்தியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தில் இன்று 08.02.2024 தொடங்கி வைத்தார்**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் இரண்டாம் கட்ட வழித்தடத்தில் இயக்குவதற்கான 36 ஓட்டுனர் இல்லாத மெட்ரோ இரயில்களின் உற்பத்தியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., இன்று 08.02.2024 அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனம், ஸ்ரீசிட்டியில் தொடங்கி வைத்தார்.

தொடக்க விழாவில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு.ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தலைமை பொது மேலாளர் திரு.ஏ.ஆர்.ராஜேந்திரன் (மெட்ரோ இரயில்), அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.அனில்குமார் சைனி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட வழித்தடத்தில் ஓட்டுனர் இல்லாமல் இயக்கப்படும் 3 பெட்டிகளை கொண்ட 36 மெட்ரோ இரயில்களை (மொத்தம் 108 பெட்டிகள்) வழங்குவதற்கான ஒப்பந்தம் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்திற்கு ரூ.1215.92 கோடி மதிப்பில் (வரிகள் உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில், வடிவமைப்பு, உற்பத்தி, சோதனை, பணியாளர்களுக்கு பயிற்சி, உதிரி பாகங்கள் வழங்கல் மற்றும் குறைபாடு பொறுப்பு போன்றவை உள்ளடங்கும்.

ஒப்பந்தம் வழங்கப்பட்ட பிறகு, வடிவமைப்பு ஆய்வுகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. இந்த ஒப்பந்ததின் கீழ், முதல் மெட்ரோ இரயிலுக்கான பெட்டிகளை உற்பத்தி செய்யும் பணியை உற்பத்தியாளர் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனம், ஸ்ரீசிட்டியில் இன்று 08.02.2024 தொடங்கியது. இதனைத் தொடர்ந்து ஓட்டுனர் இல்லாமல் இயக்கப்படும் முதல் மெட்ரோ இரயில் ஆகஸ்ட் 2024-இல் பூந்தமல்லி பணிமனையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

மெட்ரோ இரயில் பெட்டிகளின் உற்பத்தியை முடித்த பிறகு, அல்ஸ்டோம் நிறுவனம் பொருத்துதல் மற்றும் மெட்ரோ இரயில் பெட்டிகளை இணைத்தல் ஆகியவற்றைத் தொடரும். அதன்பிறகு, முதல் மெட்ரோ இரயில் தொடர் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பூந்தமல்லி பணிமனையில் வழங்கப்படுவதற்கு முன்பு உற்பத்தியாளர் வளாகத்தில் தேவையான சோதனைகளுக்கு உட்படுத்தப்படும். மெட்ரோ இரயில் தொடர் விநியோகத்தைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் பயணிகளின் சேவையை தொடங்குவதற்கான சட்டப்பூர்வ ஒப்புதல்களைப் பெறுவதுடன், மெட்ரோ இரயில் கட்டம்-2 வழித்தடத்தில் பல்வேறு நிலையில் சோதனை ஓட்டங்களுக்கு உட்படுத்தப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 2-ல் இயக்கப்படும் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில்கள் பயணிகளின் வசதி, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு அம்சங்களை வழங்குவதன் மூலம் நகர்ப்புற போக்குவரத்தை மறுவரையறை செய்கிறது. 1000 பயணிகள் வரை பயணிக்கும் திறன் கொண்ட மூன்று பெட்டிகளை கொண்ட மெட்ரோ இரயில்கள் உட்புறத்தில் விசாலமான இடங்களை வழங்குவதன் மூலம் தடையற்ற உள்நகர்வுக்கான அனுபவத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றன. குளிரூட்டப்பட்ட சூழல், பெண்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் பிரத்யேக இடங்களுடன் சிறந்த வசதியை வழங்குவதோடு பெண்களுக்கு ஏற்ற பயண அனுபவத்தையும் வழங்கும்.

அவசரகால வெளியேற்ற கதவுகள், தீயை அணைக்கும் கருவிகள் மற்றும் தடைகளை கண்டறியும் கருவிகள் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதுகாப்பை மேம்படுத்துகின்றன. இரயில்களில் ஆற்றல் திறனுக்காக மீளுருவாக்கம் செய்யக்கூடிய பிரேக்குகள் பொருத்தப்பட்டுள்ளது, அதே நேரத்தில் மேம்பட்ட பயணிகள் அறிவிப்பு அமைப்புகள் சரியான நேரத்தில் புதுப்பிப்புகளை வழங்குகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்த ஓட்டுநர் இல்லா மெட்ரோ இரயில்கள் நகர்ப்புற போக்குவரத்தில் ஒரு புதிய தரநிலையை அமைத்து, வசதி, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை இணைக்கும்.

**இணைப்பு:** ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்கள்

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 2-ல்**

**ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்கள்**

**ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில் இயக்கம்: -**

- ஆட்டோமேஷன் நிலை 4 (Grade of Automation Level 4)
- வடிவமைப்பு வேகம் மணிக்கு 90 கி.மீ. மற்றும் செயல்பாட்டு வேகம் மணிக்கு 80 கி.மீ.
- ஒவ்வொரு மெட்ரோ இரயிலும் 3 பெட்டிகளை கொண்டது.
- 67.8 மீ நீளம் மற்றும் 2.9 மீ அகலம் கொண்ட துருப்பிடிக்காத ஸ்டீல் பெட்டிகளை கொண்டது.
- ஒவ்வொரு 3 பெட்டிகள் கொண்ட மெட்ரோ இரயிலில் சுமார் 1000 பயணிகள் பயணம் செய்யலாம்.

**பயணிகளை மையமாகக் கொண்ட சிறப்பு அம்சங்கள்:**

- இடையூறு இல்லாத பயணிகளின் இயக்கத்தை உறுதி செய்யும் வகையில் பயணிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஏதுவாக அகலமான உட்புறத்தை கொண்ட மெட்ரோ இரயில்கள்.
- குளிரூட்டப்பட்ட மெட்ரோ இரயில்கள்
- பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளி பயணிகளுக்கான பிரத்யேக இடங்கள்.
- நிற்கும் பயணிகளின் கூடுதல் வசதிக்காக பெர்ச் இருக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.
- பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மெட்ரோ இரயிலின் உட்புறம் மற்றும் வெளிபுறத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்
- மொபைல்கள் மற்றும் மடிக்கணினிகளுக்களை பயன்படுத்தும் பயணிகளின் வசதிக்காக சார்ஜிங் சாக்கெட்டுகளும் பொருத்தப்படும்

**மகளிர் பயணிகளுக்கான வசதிகள்:**

- ஒவ்வொரு மெட்ரோ இரயிலிலும் பெண்களுக்கு பிரத்யேக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பெட்டியை தனித்துவமாக காட்டுவதற்காக கைப்பிடிகளில் வெவ்வேறு வண்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- மற்ற பெட்டிகளை ஒப்பிடுகையில் குறைந்த உயரத்தில் கைப்பிடிகள் நிறுவப்படுகின்றன.

**மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்:**

- இரண்டு சக்கர நாற்காலிகள் நிறுத்துவதற்கு கைப்பிடியுடன் கூடிய பிரத்யேக இடம்.
- இரயில் நிலையங்களில் இரயில்களை நீண்ட நேரம் நிறுத்தக் கோருவதற்காக நாற்காலி பகுதியில் நீண்ட நேரம் காத்திருக்கும் பொத்தான் வசதி.

**நிகழ்நேர தகவல் மற்றும் பொழுதுபோக்கு:**

- பயணிகள் எளிதாக செல்வதற்காக, அனைத்து கதவுகளுக்கும் மேல் நிகழ்நேர வழித்தடத்தின் வரைபடங்கள் எல்சிடி திரையில் காட்சிப்படுத்தப்படுகிறது.
- கூடுதல் தகவல் மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக பக்கவாட்டிலும் எல்சிடி திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்:**

- எதிர்பாராத சூழ்நிலைகளில் உடனடியாக செயல்படுவதற்காக மெட்ரோ இரயிலில் தீ மற்றும் புகை கண்டறிய அமைப்புகள் பொருத்தப்படுகின்றன.
- அவசர காலத்தில் வெளியேறுவதற்காக மெட்ரோ இரயிலின் முன்பகுதியில் கதவு அமைக்கப்பட்டுள்ளது
- இருக்கைகளுக்கு அடியில் தீ அனைப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- இரயில்களின் இயக்கத்தில் தடைகள் மற்றும் இரயில் தடம் புரள்வதைக் கண்டறிய, தண்டவாளத்தில் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப முன்னேற்றங்கள்:**

- பயணிகளின் வசதிக்காக மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு வசதிகள்
- துல்லியம் மற்றும் செயல்திறனுக்காக நுண்செயலி கட்டுப்படுத்தப்பட்ட பிரேக்குகள்.
- பயணிக்க வசதியாக ஏர் சஸ்பென்ஷன் அமைப்புகள்
- பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அதிநவீன கதவுகள் பொருத்தப்படுகின்றன
- ஒவ்வொரு கதவுகளிலும் கதவு மூடுதல் மற்றும் திறக்கும் நிலையைக் காட்டும் கருவி பொருத்தப்பட்டுள்ளது.
- மின்சாரம் மீளுருவாக்கம் செய்யும் அதிநவீன பிரேக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

**பயணிகள் அறிவிப்பு மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டு மையத்திற்கான தொடர்பு:**

- பயணிகள் அறிவிப்பு அமைப்புகளுடன் கூடிய ஓட்டுநர் இல்லாத இரயில்கள், சரியான நேரத்தில் பயணம் முழுவதும் தகவல் பரவலை உறுதி செய்கின்றன.
- செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையத்துடன் பயணிகள் தொடர்பு கொள்ள வசதியாக கூடுதல் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த ஓட்டுநர் இல்லா மெட்ரோ இரயில்களை அறிமுகப்படுத்துவதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது. பொது போக்குவரத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பயணிகளுக்கு தடையற்ற, பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான பயணத்தை வழங்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உறுதியளிக்கிறது.